# திண்டுக்கல் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**பிறப்பிப்பவர் – சீ.கருப்புசாமி. எம்.எஸ்.சி, எம்.எட்., எம்.ஃபில்**

ந.க.எண்.786/அ1/2022 நாள்: .02.2022

பொருள்: பள்ளிக்கல்வி – அமைச்சுப்பணி - திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.சு.செல்வகுமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து – ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.101 பள்ளிக்கல்வித்துறை நாள்:18.05.2018

2. வத்தலக்குண்டு மாவட்டக்கல்வி அலுவலரின் ந.க.எண்.176/ஆ1/2022 நாள்:12.01.2022

*******

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.சு.செல்வகுமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணை வழங்கக்கோரி பார்வை 2ல் காண் கடிதம் வாயிலாக கருத்துரு பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணியில் சேர்ந்த நாளான 23.09.2020 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி/ பணியாற்றும்பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் நியமன நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.சு.செல்வகுமார்,<br>இளநிலை உதவியாளர்,<br>வட்டாரக்கல்வி அலுவலகம்,,<br>கொடைக்கானல்,<br>திண்டுக்கல் மாவட்டம். | 23.09.2020 முற்பகல் | 23.09.2020 முற்பகல் |

Scanned with CamScanner

நிபந்தனைகள்:

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து மூன்றாண்டுகள் பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
2. உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாமல் இருப்பின், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து இரண்டாண்டிற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
3. இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

21/2/22

முதன்மைக்கல்வி அலுவலர்,
திண்டுக்கல்.

21/2/2022

பெறுநர்:

1. வட்டாரக்கல்வி அலுவலர், கொடைக்கானல்,
2. சார்ந்த பணியாளர் (உரியவழியாக).

நகல்: மாவட்டக்கல்வி அலுவலர், வத்தலக்குண்டு.

Scanned with CamScanner